## அம்ருதா சென்னை வளாகத்தில்

# 7-வது பி.டெக். தொகுதிக்கான ஓரியன்டேஷன்

■ சென்னை

அம்ருதா விஸ்வ வித்யாபீடத்தின் சென்னை வளாகத்தில், 2025–29 தொகுதிக்கான வழிகாட்டுதல் திட்டம் (ஓரியன்டேஷன்) நேற்று முன்தினம் தொடங்கியது. ஜூலை 28 வரை நடைபெறும் இந்நிகழ்வில் கல்வி உரைகள், சக மாணவர்களுடனான வழிகாட்டுதல் அமர்வுகள், பயிற்சி மையங்கள் அடங்கும். இந்த நடவடிக்கைகள் மாணவர்கள் வளாகத்தில் இணைந்து கொள்ளவும், கலாச்சாரத்தை அறிந்துகொள்ளவும், அவர்களின் கல்வி, தனிப்பட்ட வளர்ச்சிக்கான தெளிவான படிகளைத் திட்டமிடவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.




அம்ருதா விஸ்வ வித்யாபீடத்தின் சென்னை வளாகத்தில் 2025–29 தொகுதிக்கான ஓரியன்டேஷன் நிகழ்ச்சியில் வளாக செய்திமடலான விருத்தியின் முதல் இதழ் வெளியிடப்பட்டது.

நிகழ்ச்சியில் மாணவர்களிடையே உரையாற்றிய ஏர்செலின் நிறுவனர் மற்றும் ஏஐடபிள்யுஓ வழிகாட்டுநர் சி.சிவசங்கரன், ‘ஒவ்வொரு வெற்றியும் முயற்சியில் தொடங்குகிறது’ என்ற செய்தியுடன் மாணவர்களை ஊக்குவித்து, அவர்களது படிப்பு, வாழ்க்கையை வடிவமைக்க முதல் படிகளை எடுக்குமாறு உத்வேகம் அளித்தார்.

அம்ருதா பொறியியல் & கணினி பள்ளியின் முதல்வர் வி.ஜெயகுமார் மாணவர்களை வரவேற்று, திறமையான பொறியாளர்களை உருவாக்குவதே பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கம் என்பதை வலியுறுத்தினார். நிர்வாக இயக்குநர் ஸம்பூஜ்ய ஸ்வாமி வினயாம்ருதானந்தபுரி, தொழில்நுட்ப திறன்களை கருணையுடன் கூடிய சமூக பொறுப்புடன் பயன்படுத்துமாறு அனைவருக்கும் நினைவூட்டினார். முதல்வர் சசாங்கன் ராமநாதன், அம்ருதாவின் கண்ணோட்டம், முக்கியமான சாதனைகள் மற்றும் வளாகத்தை முன்னோக்கி நடத்தும் புதுமைப் பண்பு குறித்து உரையாற்றினார்.

இன்றைய நிகழ்வின் ஒரு பகுதியாக, வளாக செய்திமடலான விருத்தியின் முதல் இதழ் வெளியிடப்பட்டது. இதில் சமீபத்திய ஆராய்ச்சி, மாணவர் திட்டங்கள், நிகழ்வுகள் பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.